சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலத் துறை – 2022–2023 – ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறைக்கான தனி நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், நடவுக்கன்றுகள், பழமரச்செடிகள், தென்னங்கன்றுகள் மற்றும் இதர வேளாண் இடுபொருட்களை இணையவழியாக முன்பதிவு செய்யும் முறை மற்றும் அனைத்துத் திட்டங்களிலும் பயனாளிகளின் விவரங்களை படிப்படியாக கணினியில் பதிவு செய்யும் முறையினை செயல்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வே.உ2) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது, வைகாசி மாதம் 12-ம் நாள்

அரசாணை (டி) எண்.124 நாள்.26.05.2022

படிக்கப்பட்டது:

வேளாண்மை இயக்குநர், கடித எண்.வே.த.பி.2/5/ 138472/ 2019, நாள்.26.04.2022.

--------

ஆணை:-

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில், 2022-23-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

அறிவிப்பு பத்தி எண். 11 (vii)

> “வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ், பயனாளிகளை வெளிப்படைத்தன்மையுடன் தேர்வு செய்திட, அனைத்துத் திட்டங்களிலும் படிப்படியாக கணினியில் பயனாளிகளைப் பதிவு செய்யும் முறை அமல்படுத்தப்படும்.”

அறிவிப்பு பத்தி எண்.11 (viii)

"விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், நடவுக்கன்றுகள், பழமரச்செடிகள், தென்னை மரக்கன்றுகளை கணினியில் முன்கூட்டியே பதிவு செய்து காலத்தே சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யப்படும்"

2. மேற்காணும் அறிவிப்புகள் தொடர்பாக வேளாண்மை இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் இரண்டு அறிவிப்புகளும் ஒன்றினை ஒன்று சார்ந்து அமைந்துள்ளதால், ஒரே திட்டப் பிரேரணையாக தயாரிக்கப்பட்டு செயல்படுத்திட ஆணை வேண்டி, அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துருவில் கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

<u>வேளாண் இடுபொருட்கள் முன்பதிவு மற்றும் திட்டப் பயனாளிகளின் விவரங்களை கணினியில் பதிவேற்றும் முறை:-</u>

- உழவர்கள் நலன் சார்ந்த ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை வேளாண்மை – உழவர் நலத்துறை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அரசுத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் வேளாண் இடுபொருட்கள் தரமானதாகவும் சரியான பயனாளிகளை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், மானிய விலையில் வேளாண் இடுபொருட்களை வேளாண்மைத்துறை நேரடியாக விவசாயிகளுக்கு, வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் 880 வேளாண் விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், அகில இந்திய அளவில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை 2010-2011-ஆம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்பத்தில் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இதன்முதற்கட்டமாக, 70 லட்சம் விவசாயிகள்வாரியான தரவுகள் வலைதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டு, அனைத்து வகையான சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, வேளாண் விரிவாக்க மையங்களில் ஆண்டுதோறும் மின்னணுபட்டியல் மூலம் 15 லட்சம் விவசாயிகள் பயிர்சாகுபடி செய்வதற்குத் தேவையான இடுபொருட்களைப் பெற்று வருகின்றனர்.
- வேளாண் திட்டப் பலன்கள் சரியான முறையில், அனைத்து விவசாயிகளையும் சென்றடைவதை உறுதிசெய்யும்

நோக்கத்தில் செயல்படும் வேளாண்மைத்துறை, விவசாயிகள், அவர்களுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களான விதைகள், நடவுக்கன்றுகள், பழமரச்செடிகள், தென்னங்கன்றுகளை இணையவழியாக முன்பதிவு செய்யும் பொருட்டு, விவசாயிகள் தாங்களாகவே வேளாண்மைத் துறையின் வலைதளமான – tnagrisnet.tn.gov.in மற்றும் "உழவன்" கைபேசிச் செயலிமூலம் இணையவழி முன்பதிவு செய்துகொள்ள மென்பொருள் மற்றும் துறை அலுவலர்கள் உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் (UATT) கைபேசிச் செயலி மூலம் விவசாயிகளின் இடுபொருட்கள் தேவை மற்றும் பிறபதிவு விவரங்கள் ஆகியவற்றை பதிவேற்றம் செய்வதற்கான மென்பொருள் உருவாக்கி வெளியிடப்படும்.

- தென்னங்கன்றுகள் மற்றும் பழமரக்கன்றுகளை பொறுத்தவரை, விவசாயிகளால் முன்பதிவு செய்யப்பட்டபின்பு, துறை அலுவலர்களால் சரிபார்க்கப்பட்ட பின்னர், அவர்களுக்கு உரிய தென்னங்கன்றுகள் மற்றும் பழமரக்கன்றுகள் இணையவழி முறையில் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட மரக்கன்றுகளின் விவரம் குறுஞ்செய்தி மூலமாக விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படும். அதற்கேற்ற முன்பணத்தை விவசாயிகள் செலுத்த வேண்டும். இதுதொடர்பாக ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக வழங்கக்கூடிய மரக்கன்றுகளின் எண்ணிக்கை மற்றும் கட்ட வேண்டிய முன்பணத் தொகை ஆகியவற்றை தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினரால் நிர்ணயம் செய்யப்படும்.
- இணையதள வழியாக பதிவு செய்த விவசாயிகளின் விவரங்கள், இடுபொருட்கள்வாரியாக விவசாயிகள் பதிவு செய்த வட்டார வேளாண்மை/ தோட்டக் கலைத்துறை/ வேளாண் பொறியியல் துறை / வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்களால் இடுபொருட்கள் வழங்க பரிந்துரை செய்யப்படும் மென்பொருள் பக்கத்தில் (software page) காண்பிக்கப்படும். முன்னுரிமை அடிப்படையில், முதலில் பதிவு செய்த விவசாயிகளின் விவரங்களை ஒப்புதல் அல்லது நிராகரிப்பு செய்த பின்னரே, அடுத்த விவசாயியின் விண்ணப்பம் பரிசீலனை செய்ய இயலும். பதிவு செய்த முன்னுரிமை விவசாயிகளில் குறைந்தபட்சம், பத்தொன்பது சதவீதம் (19%) ஆதி

திராவிடர்களுக்கும், ஒரு சதவீதம் (1%) பழங்குடியினருக்கும் ஒதுக்கீடு செய்திடும் வகையில் மென்பொருள் உருவாக்கப்படும்.

- பதிவு செய்த விவசாயிகளின் விவரங்களை துறை அலுவலர்கள் ஆய்வு செய்து, நில விவரங்கள் மற்றும் திட்டத் தகுதித்தன்மையை சரிபார்த்து, பரிந்துரை செய்த பின்பு, விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி வாயிலாக விண்ணப்பம் ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரம் மற்றும் நான்கு இலக்கு குறியீட்டு எண் தெரிவிக்கப்படும். ஒப்புதல் அளித்த பின்னர், இடுபொருட்கள்வாரியாக பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பம் இடுபொருள் வழங்கும் ஆணையாக மின்னணு முறையில் உருவாக்கப்படும். விவசாயிகள் நான்கு இலக்கு குறியீடு கொண்டு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் சென்று நேரடியாக இடுபொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும், குறுஞ்செய்தியாக வரப்பெற்ற இடுபொருட்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரத்துடன் உள்ள பணபரிவர்த்தனைக்கான இணைப்பை (link) சொடுக்கி, முன்கூட்டியே விவசாயிகள் தங்களின் பங்களிப்பை இணைய வழியாக செலுத்தும் வசதியும் கொடுக்கப்படும். மேற்குறிப்பிட்ட முறையினை செயல்படுத்துவதன் மூலம், அனைத்து திட்ட பயனாளிகளின் விவரங்கள் படிப்படியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்படும்.

3. மேற்படி விவரங்களின் அடிப்படையில், தற்போது செயல்பாட்டிலுள்ள துறை அலுவலர்கள் மூலம் எழுத்து வடிவமாக வழங்கப்பட்டாலும், அதனை உடனடியாக கணினியில் பதிவேற்றம் செய்து, வேளாண்நிதிநிலை அறிவிப்பின்படி அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் அவர்களுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களான விதைகள், நடவுக்கன்றுகள், பழமரச்செடிகள், தென்னங்கன்றுகள் மற்றும் இதர இடுபொருட்களை இணையதளவழியாக முன்பதிவு செய்யும் முறை மற்றும் அனைத்துத் திட்டங்களிலும் படிப்படியாக கணினியில் பயனாளிகளின் விவரங்களைப் பதிவு செய்யும் முறையினை 2022-23 ஆம் நிதி ஆண்டு முதல் செயல்படுத்திட ஏதுவாக, வேளாண்மை இயக்குநர் அரசின் ஆணையினை கோரியுள்ளார்.

4. வேளாண்மை - உழவர் நலத்துறையின் 2022-2023 - ஆம் ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட இவ்வறிவிப்புகள் தொடர்பான வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, மேலே பத்தி 3- ல் உள்ள வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அனைத்து

மாவட்டங்களிலும் விவசாயிகள், அவர்களுக்குத் தேவையான விதைகள், நடவுக்கன்றுகள், பழமரச்செடிகள், தென்னங்கன்றுகள் மற்றும் இதர வேளாண் இடுபொருட்களை இணையதளவழியாக முன்பதிவு செய்யும் முறை மற்றும் அனைத்துத் திட்டங்களிலும் படிப்படியாக கணினியில் பயனாளிகளின் விவரங்களைப் பதிவுசெய்யும் முறையினை வேளாண்மை - உழவர் நலத் துறையின் அனைத்து துறைத் தலைமை அலுவலகங்களிலும் 2022-23-ஆம் நிதி ஆண்டிலிருந்து செயல்படுத்திட வேளாண்மை - உழவர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கீழ்க்காணும் துறைத் தலைவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

1. ஆணையர், சர்க்கரைத்துறை, சென்னை-35
2. வேளாண்மை இயக்குநர், சென்னை-5
3. இயக்குநர்,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
4. இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, சென்னை-32.
5. தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை -35.
6. செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-32.
7. பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.
8. இயக்குநர், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை, கோயம்புத்தூர்-13.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்

கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர், சர்க்கரைத் துறை, சென்னை-35

வேளாண்மை இயக்குநர், சென்னை-5

இயக்குநர்,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.

இயக்குநர்,வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, சென்னை-32.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்),
சென்னை -35.

செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு
முகமை, சென்னை-32.

பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

இயக்குநர், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை,
கோயம்புத்தூர்-13.

நகல்

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை-9.

உதவி நிரலர், வேளாண்மை- உழவர் நலத் துறை, சென்னை-9.

உதிரி/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்